4th November 1966]

'Village Jeep Journal'

* 398 Q.—Sri V. SANKARAN: Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) whether any project by name "Village Jeep Journal" to convey Farm News to villages has been envisaged to be put through in Thanjavur district; and

(b) if so, the details thereof?

கனம் திரு. பூ. கக்கன்: (அ) ஆம்.

(இ) சபை முன் விவர அறிக்கை [a] ஒன்று வைக்கப் பட்டுள்ளது.

திரு. வை. சங்கரன்: இதனுல் கண்ட பலனை விவரமாகக் கூற முடியுமா? அவ்வாறு நல்ல பலன் விளைந்திருந்தால் நம மாகாணத்திலே மற்ற கிராமங்களுக்கும் இதை விஸ்தரித்து பேஸ்ட் ப்ரொக்ராமாகக் கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்கப் படுமா?

கனம் திரு. பூ. கக்கன்: இது பரிட்சார்த்தமாகத்தான் செய்திருக்கிறார்கள். முடிவு பின்னுல்தான் தெரியும். முடிவு தெரிந்து வெற்றிகரமாக இருந்தால் மற்ற இடங்களுக்கும் விஸ்தரிக்க ஏற்பாடு செய்யப்படும்.

Crop Insurance Scheme

* 399 Q.—Sri V. SANKARAN: Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) whether there is any proposal to introduce Crop Insurance Scheme in the State; and

(b) if so, the details thereof?

கனம் திரு. பூ. கக்கன்: (அ) & (இ) இம்மாநிலத்தில் பயிர் இன்ஷூரன்ஸ் திட்டம் இன்னும் செயல்படவில்லை. பயிர் இன்ஷூ-ரன்ஸ் முன்னேடித் திட்டம் ஒன்றை நிறைவேற்றுவதற்குரிய செயற்குறிப்புகளை வேளாண்மைத்துறை நெறியாளர் ஆலோசித்து வருகிறார். தமிழ் நாட்டில் தேர்ந்தெடுத்த சில பகுதிகளில் புன் செய் நிலங்களில் பயிராகும் சோளம், கம்பு, கேழ்வரகு சம்பந்த மாக முதலில் பயிர் இன்ஷூரன்ஸ் திட்டத்தைச் செயலுக்கு கொண்டுவர இயலுமா என்பதை அறிய புள்ளி விவரங்களைத் திரட்டுவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

திரு. வை. சங்கரன்: "காட்டில் இன்ஷூரன்ஸ்" திட்டம் ஆரம் பிப்பதைப்போல் பரிட்சார்த்தமாகவாவது ஒரு பிராந்தியத்தில் இதை ஆரம்பித்து அதனுடைய பலாபலன்களைக் கண்டறிவதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா?

கனம் திரு. பூ. கக்கன்: பரிட்சார்த்தமாகப் பார்ப்பது என்று சொல்லித்தான் இதை டைரக்டர் அவர்கள் பரிசிலனை செய்து கொண்டிருக்கிறார்கள்; இதை ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள்.

---

[a] 287–288-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.